**தலைப்பு 295 – வர்த்தக திணைக்களம் - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 295 - வர்த்தக திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வர்த்தக திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வர்த்தக திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** | | |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 756(1) | திணைக்களத்தில் உள்ள பொருட்களை சரி பிழை பார்ப்பதற்காக ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் | திணைக்களத்தின் நூலகத்தில் புத்தகங்களின் மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள துடன், அந்த | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்மெய்யாய்வு சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் நூலக புத்தகங்கள் மெய்மெய்யாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | அறிக்கையை விரைவாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | நிதிப் பிரமாணம் 891 | பிணைப் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | பிணைப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பிணை பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் 09 செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் அதில் 05 செயற்பாடுகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | சர்வதேச வியாபாரத்தின் தற்போதைய அபிவிருத்தி சந்தர்ப்பங்கள் மற்றும் ஆபத்துக்களை இனங்காண்பதன் கீழ் உரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் அது தொடர்பான ஆராய்ச்சி மற்றும் இலங்கை உலகத்துடன் மேற்கொள்கின்ற வியாபாரங்களுக்கு உரிய ஆராய்ச்சியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்படுகின்ற செயற்பாடுகள் கால ரீதியில் நிறைவேற்றப்படல் வேண்டும். |

### 3.2 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கையில் தடை செய்யப்பட்ட மற்றும் நடவடிக்கை எடுக்கக் கூடிய மானியம் மூலம் மற்றும் வீழ்ச்சியடைதலில் இருந்து உள்நாட்டு கைத்தொழிலை பாதுகாக்கும் நோக்கில் 2018 இன் 2 ஆம் இலக்க வீழ்ச்சிக்கு எதிரான மற்றும் எதிர் விதிப்பு வரி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அந்த சட்டத்தை அமுல்படுத்துவதற்காக தேவையான விதிகள் வர்த்தமானியில் பிரசுரித்த திகதி முதல் சட்டம் அமுல்படுவதாக குறிப்பிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்காமையின் காரணமாக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | 2023 மார்ச் 01 ஆம் திகதி கௌரவ அமைச்சிரின் தலைமையில் அமைச்சில் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், அதன் போது விதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தற்போது உரிய பிரமாணங்கள் மீண்டும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான விதிகளை விரைவாக வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெளிநாடுகளில் காணப்படுகின்ற தூதரகங்களில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற வர்த்தக உத்தியோகத்தர்களின் பிரதான பணியான வெளிநாட்டு வியாபாரங்களை மேம்படுத்துவதற்குரிய வர்த்தக உத்தியோகத்தர்களுக்கு | செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக அந்த செயற்பாடுகளின் உளள்படியான விளைவுகளை குறிப்பிட்டு மாதாந்த அறிக்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு வர்த்தக திணைக்களம் | ஏற்றுமதி பங்களிப்பை மதிப்பிடுவதற்காக முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படுகின்ற இலக்குகளை ஒப்பிடும் போது வர்த்தக திணைக்களத்தின் பங்குபற்றல் இன்றி ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பங்குபற்றிய இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றம் தயாரிக்கப்படுகின்றது. தூதரகங்களின் இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றத்தை ஒப்பிடும் போது ஒட்டுமொத்த நாட்டினதும் ஏற்றுமதி இலக்கு மற்றும் ஒன்றிணைந்த உள்ளபடியான ஏற்றுமதி வருமானம் தூதரகங்களின் ஏற்றுமதி இலக்குகள் மற்றும் செயல் முன்னேற்றமாக இனங்காணப்பட்டதுடன், வர்த்தக உத்தியோகத்தர்களின் செயற்பாடுகளை ஏற்றுமதி அபிவிருத்திக்கான பங்களிப்பை மதிப்பிடும் திட்ட முறைமையொன்று திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | வெளிநாட்டில் உள்ள சகல வர்த்தக உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்திருந்தது. மேலும் இதற்காக தயாரிக்கப்பட்ட மாதிரி செயல்முன்னேற்ற அளவிடலுக்காக மிகவும் பொருத்தமான குறிகாட்டிகளுடன் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய இலக்கம் 1589/30 என்ற அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணி நடைமுறை விதிக் கோவையின் 114 ஆம் பந்தியின் பிரகாரம் பதவியொன்றில் பதிற்கடமைக்காக நியமிக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு மாத்திரம் உரித்தாகும். அதன் பிரகாரம் வர்த்தக பணிப்பாளர் நாயக பதவிக்கு உரிய நியமன அதிகாரி அமைச்சரவையாக இருந்த போதிலும், அமைச்சரவையின் | உரிய நியமனத்திற்காக அமைச்சரவை அங்கீகாரம் இருக்கின்றமைக்கான ஆவணங்கள் திணைக்களத்திடம் காணப்படவில்லை. | பதிற்கடமைக்காக நியமித்தல் முறையான அங்கீகாரத்துடன் இருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரம் இன்றி 2020 மே மாதம் முதல் 2022 செப்டம்பர் மாதம் வரை வணிக பணிப்பாளர் நாயக பதவியில் பதிற்கடமைக்காக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். | | |
| (இ) | பதிற்கடமை வர்த்தக பணிப்பாளர் நாயகம் தொடர்பாக இலண்டன் தூதுவரால் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இலத்திரனியல் தபால் அறிவித்தல் தொடர்பான முறைப்பாடு 2022 நவம்பர் 01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | விசாரணை நடவடிக்கைகள் வியாபார, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டதுடன், வர்த்தக திணைக்களத்தின் மூலம் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை . | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் ''பீ'' கணக்கின் திணைக்கள புத்தகத்தின் பிராகரம் மீதி மற்றும் திறைசேரி கணனி அச்சிடலின் பிரகாரம் மீதிகள் என்பவற்றுக்கு இடையே ரூபா 278,944 வேறுபாடொன்று 16 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்பட்டிருந்தது. | 2006 ஆம் ஆண்டின் கணக்குகளை ஒப்பீடு செய்யும் போது கண்டறியப்பட்ட கணக்கீட்டு தவறுகள் சரி செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டுகளில் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திறைசேரி புத்தகங்கள் மற்றும் திணைக்கள புத்தகங்களுக்கு இடையே வேறுபாடுகளை இணக்கம் செய்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் 40(2)(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் தகுதியான கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். அமைச்சின் உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் திணைக்களத்தின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்காக அமைச்சின் மூலம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவித்தலின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவித்தலின் பிரகாரம் அமைச்சின் மூலம் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படும். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 151 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 103 ஆனமையால் மொத்த வெற்றிடமான பதவிகள் 48 ஆகும். அந்த வெற்றிடங்களில் திணைக்களத்தின் வர்த்தக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக வர்த்தக பணிப்பாளர் நாயகம் என்ற பதவிகள் உள்ளடங்கிய விஷேட மற்றும் முதலாவது தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 பதவிகளில் 08 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. | வர்த்தக பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளின் பதிற்கடமைக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வர்த்தக பணிப்பாளர் பதவி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி என்பவற்றின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது. ஏனைய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேவையினை சரியாக இனங்கண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |